[5th February 1963

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : ஜவ்வரிசித் தொழிலுக்கு மேலும் பாதுகாப்பு அளிக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பாதுகாப்பு நீக்கப்பட்டு விட்டது. ஆனல், வெளிநாடுகளிலிருந்து ஜவ்வரிசி இறக்குமதி தடை செய்யப்பட்டிருக்கிற காரணத்தால், இதற்குப் போதிய பாதுகாப்பு இருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : ஜவ்வரிசி உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகளுக்குப் பக்கத்தில் சகிக்க முடியாத ஒரே நாற்ற மான நிலைமை இருக்கிறது. இதனல் அந்தப் பக்கங்களில் உள்ள மக்களுடைய சுகாதாரம் பாதிக்கப்படுகிறதா என்று சர்க்கார் பரிசீலனை செய்ததா ?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் : இது சுகாதார அமைச்சருக் குப் போடவேண்டிய கேள்வி.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : ஜவ்வரிசிக்குக் குறைந்த பட்ச விலை நிர்ணயம் செய்ய உத்தேசம் ஏதாவது இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விதமான அவசியம் இப்பொழுது ஒன்றுமில்லை. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி தடை செய்யப்பட்டிருக்கிற காரணத்தால், உள் நாட்டிலேயே சாதாரணமாக நல்ல முறையில் ஜவ்வரிசி விற்பனை ஆகக்கூடிய நிலைமைதான் இருக்கிறது.

Dharmapuri panchayat

*72 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state the reason for deferring the proposal for the conversion of Dharmapuri Panchayat into a municipality after the publication of the notification?

THE HON. SRI S. M. A. MAJID : The question whether or not the Dharmapuri Panchayat among others should be converted into a Municipality in the present national emergency is under the consideration of the Government.

தற்போதுள்ள தேசிய நெருக்கடியின் காரணமாக, தர்மபுரி பஞ்சாயத்தையும், மற்ற பஞ்சாயத்துகளையும் நகராட்சிகளாக மாற்றுவதா, இல்லையா என்னும் பிரேரணை அரசினரின் பரிசீலனை

9–00 a.m. யில் இருக்கிறது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : சார், ஏற்கனவே இது பற்றி கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டு நாளது வரையில் இது அமுலாக்கப்படவில்லை. கெஜட்டில் பிரசுரம் செய்வதில் கோளாறு இருக்கிறது என்பது உண்மையா ? அப்படியானல் அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கெஜட்டில் பிரசுரம் செய்வதில் கோளாறு ஒன்றும் இல்லை. தர்மபுரி பஞ்சாயத்தையும் மற்றும் மூன்று பஞ்சாயத்துக்களையும் நகராட்சியாக மாற்றுவது பரிசீலனையில் இருக்கிறது.

MR. SPEAKER : Questions are over.